செய்தி வெளியீடு எண்:49 நாள்:22.01.2021

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (22.1.2021) தலைமைச் செயலகத்தில், சட்டத்துறை சார்பில் வேலூர் மாவட்டம், காட்பாடி, காந்தி நகரில் உள்ள வேலூர் அரசு சட்டக் கல்லூரி வளாகத்தில் 4 கோடியே 27 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதிக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

2017–18ஆம் ஆண்டு சட்டத்துறை மானியக் கோரிக்கையில், வேலூர் மாவட்டம், காட்பாடியில் உள்ள அரசு சட்டக் கல்லூரியில் சுமார் 100 மாணவியர் தங்கி பயிலும் வகையில் புதிய மாணவியர் விடுதிக் கட்டடம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, வேலூர் அரசு சட்டக் கல்லூரி மாணவியர்களுக்கென விடுதி இல்லாததால், வெளியூர்களிலிருந்து வந்து வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் சட்டக் கல்வி பயிலும் மாணவியர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, வேலூர் அரசு சட்டக் கல்லூரி வளாகத்தில், 2,410 சதுர மீட்டர் பரப்பளவில், தரை மற்றும் இரு தளங்களுடன், சுமார் 100 மாணவிகள் தங்கும் வகையில், 4 கோடியே 27 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதிக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள். இப்புதிய விடுதிக் கட்டடம், 37 அறைகள், நவீன சமையற்கூடம், உணவுக்கூடம், சைபர் கபே, திறன் மேம்பாட்டு பட்டறை கூடம், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதி, உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம், தலைமைச் செயலாளர் திரு. க.சண்முகம், இ.ஆ.ப., சட்டத்துறைச் செயலாளர் திரு.ச.கோபி ரவிகுமார், சட்டக் கல்வி இயக்குநர் முனைவர் நா.சு. சந்தோஷ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9